## கைத்தொழில்[1]

மீளாய்விற்குரிய ஆண்டுப்பகுதியில் கைத்தொழில்துறை, நடைமுறை நியதிகளில் 10 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. உண்மை நியதிகளில் கைத்தொழில் வெளியீடு 2 சதவீதத்தால் அதிகரித்திருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது 1983ஆம் ஆண்டின் கைத்தொழில் உற்பத்தியின் வளர்ச்சி வீதத்தில் ஒரு மெதுவான போக்கைக் காட்டுகின்றது. அண்மைய ஆண்டுகளில் வளர்ச்சியின் உத்வேகத்தில் ஒரு மெதுவான போக்குக் காணப்பட்டபோதும் ஏற்றுமதி சார்ந்த அபிவிருத்தி நடவடிக்கைகளில் இத்துறை தொடர்ந்தும் ஆற்றல்மிக்க பங்கினை வகித்தது. பல்வேறு வகைப்பட்ட ஊக்குவிப்புக்களின்கீழ் இத்துறை இனிவரும் ஆண்டுகளில் நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் உறுதியான சாதகமான தாக்கங்களை ஏற்படுத்தும் முதலீடுகளைத் தொடர்ந்தும் கவர்ந்தது. ஏற்றுமதி வருவாய்களில் இத்துறையின் பங்களிப்பு 1978இல் 14 சதவீதத்திலிருந்து 1983இல் 35 சதவீதத்திற்கு அதிகரித்து பொருளாதார அமைப்புப் பண்பில் மாற்றத்தை விளைவித்தது. எது எப்படியிருப்பினும் மிகவும் குறைந்தளவிலான உள்நாட்டுப்பெறுமதிக் கூறுகளைக்கொண்ட பெற்றோலிய உற்பத்திகள், ஆடைகள் என்பவற்றில் ஏற்பட்ட ஏற்றுமதி வளர்ச்சிகளுக்கு இடமளிக்கப்பட்ட பின்னரே கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

1983ஆம் ஆண்டில் வளர்ச்சியில் ஏற்பட்ட வீழ்ச்சிப்போக்கு அரச கூட்டுத்தாபனங்களின் வெளியீட்டில் ஏற்பட்ட வீழ்ச்சியில் பெருமளவு பிரதிபலித்தது. மொத்தப்பெறுமதி நியதிகளில் கைத்தொழில் உற்பத்தியில் மிகப்பெரும் பங்கினைக் கொண்டிருக்கும் பெற்றோலிய தூய்மைப்படுத்தல் 1983ஆம் ஆண்டின் முதற்பகுதியில் எட்டுக்கிழமைகளுக்கு மூடப்பட்டிருந்தமை அதன் வெளியீட்டில் 21 சதவீதம் கொண்டதொரு வீழ்ச்சி ஏற்படக் காரணமாயிற்று. அரசதுறைக் கைத்தொழில்களில் நீண்டகாலப் பிரச்சனையாக இருந்துவரும் குறைப்பயன்பாடு 1983ஆம் ஆண்டில் மிக மோசமடைந்ததுடன் கைத்தொழில் உற்பத்தி மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இதற்கு மின்வெட்டு, யூலை கலவரங்களின் காரணமாக தோன்றிய வேலை நேரக்குறைப்பு போன்ற அவற்றின் கட்டுப்பாட்டிற்கப்பாற்பட்ட பிரச்சனைகளும் ஓரளவு காரணமாக இருந்தது. தனியார்துறையின் வளர்ச்சி மெச்சத்தக்கதாக இருந்ததுடன் இது அரசதுறைக் கைத்தொழில்களின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியையும் மிகக்கூடுதலாக எதிரீடு செய்தது.

கைத்தொழில்துறையில் நிலவிய பிரச்சனைகள் இனக்கலவரங்களின் விளைவாக 1983 யூலை, ஒகத்து மாதங்களில் நாட்டில் தோன்றிய நிலைமையினால் மேலும் சிக்க

---

1. கடந்த காலங்களைப் போன்றே கைத்தொழில்துறையின் செயற்பாட்டுத் தரவுகள் அரச தனியார்துறைகளிலிருந்த பெரிய, நடுத்தர, சிறியதுமான தெரிந்ததும், பதிவுசெய்யப்பட்டதுமான தயாரிப்புக் கைத்தொழில்கட்கு மத்திய வங்கியால் அனுப்பிவைக்கப்பட்ட கேள்விக்கொத்துக்களின் கூற்றுக்களின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டன. (எனினும் இது தேசிய கணக்குகளில் தயாரிப்புத் தொழிலாகக் கணிக்கப்பட்ட பெருந்தோட்டப் பிரிவின் ஏற்றுமதி, பதனிடல் நடவடிக்கைகளை உள்ளடக்கவில்லை.) பொதுவாகப் பதில்கள் மூன்றிலொரு பங்கினரிடமிருந்து கிடைத்தன. இவை பெரும்பாலும் பெருங்கைத்தொழில்களை உள்ளடக்கியிருந்தன. தரவுகள் கிடைக்காத பகுதிகளில் அரசமுகவர் நிலையங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றில் கிடைத்த தரவுகளின் அடிப்படையில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

லடைந்தன. கைத்தொழில் வர்த்தக நிறுவனங்களுக்கு ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடுவதற்கு அரசினால் நியமிக்கப்பட்ட குழுவினது கணிப்பின்படி 122 கைத்தொழில் நிறுவனங்கள் சேதமாக்கப்பட்டிருந்ததுடன் 13,366 தொழிலாளர்கள் வேலையின்றியிருக்கின்றனர். பதினெட்டு கைத்தொழில் தொகுதிகள் சேதமாக்கப்பட்டதனால் பாதிக்கப்பட்டுள்ளன என இனங்காணப்பட்டுள்ள வேளையில் புடவைகள் அணியும் ஆபரணங்கள் துறைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டிருப்பதுடன் புடவைத்துறையில் 43 கைத்தொழில் நிறுவனங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. உணவு, குடிபானம், புகையிலைத்துறையில் இன்னொரு 20 நிறுவனங்களும் இரசாயன பிளாத்திக்கு உற்பத்திகளில் 21 நிறுவனங்களும் தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்தி வகைகளில் 16 நிறுவனங்களும் சேதமடைந்துள்ளன. சேதமடைந்த கைத்தொழில் நிறுவனங்களில் 32 நிறுவனங்கள் 12 மாத காலப்பகுதியில் ரூ. 8000 இலட்சங்கொண்ட ஏற்றுமதிக் கட்டளைகளையும் பெற்றிருந்தன.கைத்தொழில்களை மீளத்திருத்தி அமைக்க ஏற்படும்மொத்தச்செலவு ரூ. 17,500 இலட்சங்களென மதிப்பிடப்பட்டது. பொதுவாகக் கைத்தொழில் உற்பத்திகள் மீதான கலவரங்களின் தாக்கங்களின் மதிப்பீடு முரண்பாடானதாக இருப்பதற்கு இதே கைத்தொழிலில் இன்னொரு வடிவில் காணப்பட்ட பயன்படுத்தப்படாத இயலளவு (இவை கலவரங்களால் பாதிக்கப்படவில்லை)உற்பத்தியில் ஏற்பட்ட இழப்புக்களை ஈடுசெய்யக் கூடியனவாக இருந்தமையே காரணமாகும். உண்மையில் மிகக் கூடியளவிற்கு பாதிக்கப்பட்ட புடவை, ஆடைத்தயாரிப்புக்கள் துறை மீளாய்விற்குரிய காலத்தில் உற்பத்தியில் மிக உயர்ந்த வளர்ச்சியைப் பதிவு செய்தது. மத்தியவங்கியின் அளவீடுகளின்படி சேதமடைந்த நிறுவனங்களில் 16 சதவீதமானவற்றின் மறுசீரமைப்புச் செயற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்வேளையில் 10 சதவீதமானவை 1983ஆம் ஆண்டு இறுதியில் உற்பத்தியை மீள ஆரம்பித்திருந்தன.

பல அரசதுறைச் செயற்றிட்டங்கள் தொடர்ந்தும் பெரும் இழப்புக்களை ஏற்படுத்திவந்ததனால் இவ்வாண்டுக்காலத்தில் இடைநிறுத்தப்பட்டன. ரூ. 7,500 இலட்சங்களை மூலதன முதலீடாகக் கொண்ட பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நைலோன் 6 செயற்றிட்டம் ரூ, 2,070 இலட்ச மூலதன முதலீட்டினைக்கொண்ட உருக்குக் கூட்டுத்தாபனத்தின் நிலை 11 ரூ. 28,190 இலட்சம் மூலதன முதலீட்டினைக் கொண்ட அரச வளமாக்கித் தயாரிப்புக் கூட்டுத்தாபனத்தின் செயற்றிட்டம் ஆகிய பாரிய செயற்றிட்டங்களும் இத்தொகுதிக்குள் அடங்கும். இம்முயற்சிகளின் தொழிற்பாடுகள் இலாபமற்றனவாக மாறியமைக்கு இலங்கை, வெளிநாடுகள் இரண்டினதும் சூழ்நிலைகள் மாற்றமடைந்தமையே காரணமாகும். பெருமளவு மூலதனம் தொடர்புற்றுள்ளமை அதேபோன்று பெருமளவு எண்ணிக்கை கொண்ட தொழில்வாய்ப்பு ஆகியவற்றைக் கருத்திற்கொள்கையில் இத்தொழிற்சாலைகளை நிரந்தரமாக மூடிவிடுவது அரசிற்கு ஒரு கடினமான அரசியல் முடிவாக இருக்கும். அவ்வாறெனினும் இவை அண்மைய எதிர்காலத்தில்பொருளாதார, வர்த்தக ரீதியில் ஆற்றல்மிக்க இலாபத்தன்மையைக் காட்டாவிடின் இம்முயற்சிகளுக்குத் தொடர்ந்தும் உதவுதொகை வழங்குவதில் எவ்வித நியாயமும் இருக்கமுடியாது.

1977ஆம் ஆண்டில் இடம்பெற்ற சீர்திருத்தங்கள் இறக்குமதிப் போட்டிகளி லிருந்து உள்ளூர் கைத்தொழிலைப் பாதுகாக்கும் முக்கிய கருவியாக தீர்வைகள் விளங்கவேண்டுமென்ற நோக்குடன் இலங்கையின் இறக்குமதித் தீர்வை அமைப்பு திருத்தப்பட்டது. எனினும் புதிய தீர்வைக்கொள்கை முழுமையாக மீளாய்வு செய்யப்படாமையினால் சில நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் உயர்ந்த பாது காப்பையும், மற்றையவற்றிற்குக் குறைந்த பாதுகாப்பையும் வழங்கியதன்மூலம் சில குறிப்பிட்ட வேறுபாடுகளுக்கு வழிவகுத்தது. 1979—1983ஆம் ஆண்டுப்பகுதி யில் தீர்வை அமைப்பிற்கு பல மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதெனினும் இவை 1977இல் அறிவிக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையின் நோக்கங்களை முழுமையாக உள்ளடக்கிய தீர்வை அமைப்பை நோக்கிச் செய்யப்பட்ட முயற்சி களெதனையும் எடுத்துக்காட்டவில்லை. சில தீர்வை மாற்றங்கள் தயாரிப்பாளர் களின் முறையீடுகளைக் கவனத்திற்கொண்ட பாதுகாப்புகளாக விளங்கியவேளை யில் ஏனைய சில வருவாயையே முக்கிய கவனத்திற் கொண்டவையாக விளங்கின. 1983இல் வருவாய் காரணங்களுக்காக இறக்குமதித் தீர்வைகள் 2.5 இலிருந்து 10 சதவீதப் புள்ளிகள் அளவிற்கு உயர்த்தப்பட்டன. பாதுகாப்பிற்கான தாக்கம் மட்டங்களைக் கவனத்திற்கொண்டிராத ஒழுங்கற்ற இல்வகைத்திருத்தம் தொடர்ச் சியான வேறுபாடுமிக்க தீர்வை அமைப்பிற்கு மட்டுமே உதவிபுரியும். ஒழுங்கான தீர்வை அமைப்பை உருவாக்குவதற்கு சனாதிபதியின் தீர்வை ஆணைக்குழுவின் பணி தாக்கம்மிக்க பாதுகாப்பு மட்டங்களையும் தொழில் வாய்ப்புக்களை ஊக்கு விப்பதை உள்ளடக்குகின்ற அரசின் சமூக, பொருளாதார விடயங்களுக்கு முன் னுரிமை அளிக்கின்றமையைக் கருத்திற்கொண்டதாக இருக்கின்றது. ஏனெனில் பன்னாட்டுச் சந்தையில் முடிவாகத் தாக்கத்துடன் போட்டியிடத் தக்க திறமை வாய்ந்த தயாரிப்புத்துறையைக் கட்டியெழுப்புவதே அரசகொள்கையின் நோக்க மாக விளங்குவதனால் இலங்கை ஒழுங்கான தீர்வை அமைப்பொன்றை உருவாக்கு வதின் முக்கியத்துவம் அளவுக்குமீறி வலியுறுத்தப்படமுடியாது.

1983ஆம் ஆண்டில் வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக்குழு ரூ. 10,600 இலட்சங் கொண்ட முதலீட்டு உள்ளார்ந்த வளத்தையும், மதிப்பிடப்பட்ட 8,914 தொழில் வாய்ப்பு மட்டத்தையும் கொண்ட 56 கைத்தொழில் செயற்றிட்டங்களுக்கு ஒப்பு தலளித்திருந்தது. 1983 யூன் இறுதியில் உள்ளவாறு வெளிநாட்டு முதலீட்டு மதி யுரைக்குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட 114 செயற்றிட்டங்கள் தொழிற்பாட்டிலி ருப்பதுடன் 18,974 ஆட்களுக்கு தொழில் வாய்ப்பையும் வழங்கியுள்ளன. இச் செயற்றிட்டங்களின் வெளிநாட்டு, உள்நாட்டு முதலீடுகள் முறையே ரூ. 4,620 இலட்சமாகவும் ரூ. 10,210 இலட்சமாகவும் விளங்கின. தொழிற்பாட்டிலுள்ள செயற்றிட்டங்களின் மொத்த எண்ணிக்கையில் 43 செயற்றிட்டங்கள், புடவை தைக்கப்பட்ட ஆடைகள் துறையாக இருந்ததுடன் 13,757 ஆட்களுக்கும் தொழில் வாய்ப்பை வழங்கியிருக்கின்றன. இரசாயன, இரசாயன உற்பத்திகள், பிளாத்திக்கு இறப்பரை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களில் 29 செயற்றிட்டங் கள் ஈடுபட்டிருந்ததுடன் 1,773 ஆட்களுக்கு தொழில் வாய்ப்பையும் வழங்கி யுள்ளன.

கைத்தொழில் அறிவியல் அலுவல்கள், புடவைக் கைத்தொழில், கடற்றொழில் அமைச்சிலுள்ள உள்நாட்டு முதலீட்டு மதியுரைக்குழு இவ்வாண்டுக்காலத்தில் 346 கைத்தொழில் செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. இச்செயற்றிட்டங்களின் உள்ளார்ந்த முதலீடு ரூ. 4,150 இலட்சங்களாக விளங்கியதுடன் அவை ஏறத்தாழ 9,894 ஆட்களுக்கு தொழில்வாய்ப்பை வழங்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழு 1983 ஆம் ஆண்டில் 15 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியது. இதன்படி ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த எண்ணிக்கை ஆண்டின் இறுதியில் 185இற்கு அதிகரித்தது. இதில் 99 நிறுவனங்கள் பல்வேறுபட்ட கைத்தொழில்களை ஏற்படுத்துவதற்காக கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவுடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளன. அவற்றில் 66 செயற்றிட்டங்கள் வர்த்தக உற்பத்தியில் ஈடுபட்டிருந்ததுடன் 26,053 ஆட்களுக்கு தொழில் வாய்ப்பினை வழங்கியிருக்கின்றன.

கைத்தொழில் ஏற்றுமதித் துறையைப் பொறுத்தவரையில் பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதியில் வீழ்ச்சி காணப்பட்டது. இதற்கு பெப்புருவரி, மாச்சுப் பகுதியில் தூய்மி மூடப்பட்டிருந்தமையின் விளைவாக ஏற்றுமதிக்கான மிகை கிடைப்பதில் குறைவு ஏற்பட்டமையே முக்கிய காரணமாகும். வளமாக்கியின் (யூரியா) உள்நாட்டுத் தயாரிப்பிற்காக நப்தா வழங்கப்பட்டமையும் இவ்வீழ்ச்சிக்கான ஒரு உதவு காரணியாக இருந்தது. ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் 1982இன் ரூ. 49,910 இலட்சங்களிலிருந்து 1983இல் 61,390 இலட்சங்களுக்கு 23 சதவீதத்தால் அதிகரித்தன. சிஎஉ நியதிகளில் பெற்றோலிய உற்பத்திகளை உள்ளடக்கிய கைத்தொழில் ஏற்றுமதிகள் 3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தபோதும் ரூபா நியதிகளில் 1982இன் ரூ. 82,710 இலட்சங்களிலிருந்து 1983இல் ரூ. 88,210 இலட்சங்களுக்கு அதிகரித்து 7 சத வீதங்கொண்ட உயர்வு காணப்பட்டது.

**உற்பத்தி**

உண்மை நியதிகளில் பொதுவான கைத்தொழில் வெளியீடு 1982 ஆம் ஆண்டின் அதிகளவு வளர்ச்சி வீதமான 9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1983இல் 2 சதவீதத்தால் அதிகரித்திருக்கிறது என மதிப்பிடப்பட்டுள்ளது. இது முக்கியமாக தனியார்துறைக் கைத்தொழிலில் ஏற்பட்ட 26 சதவீத வளர்ச்சியினாலும், அரசதுறையில் ஏற்பட்ட 15 சதவீதமான எதிர்க்கணிய வளர்ச்சியினாலும் ஏற்பட்டதாகும். 1983இல் அரசதுறைக் கைத்தொழில் வெளியீட்டின் வளர்ச்சியில் ஏற்பட்ட எதிர்க்கணிய வளர்ச்சி வீதத்திற்கு பெற்றோலிய, இரசாயன உற்பத்திகளின் வெளியீட்டில் ஏற்பட்ட 21 சதவீத வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் வெளியீடு தவிர்ந்த அரசினதும் தனியார் துறைகளின் மொத்தக் கைத்தொழில் உற்பத்தி 7 சதவீத அதிகரிப்பை எடுத்துக் காட்டியது.

உண்மை நியதிகளில் அதிகரித்த உற்பத்தியைப் பதிவுசெய்த துறைகளுக்கிடையே ஏற்றுமதிசார்ந்த ஆடைக்கைத்தொழில் குறிப்பாக முதலீட்டு ஊக்குவிப்பு

வலயத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் பெருமளவு காரணமாக புடவைகள், அணியும் ஆபரணங்கள், தோல் உற்பத்திகள் (34 சதவீதம்) உணவு, குடிபானம், புகையிலை உற்பத்திகள் (11 சதவீதம்) உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (9 சதவீதம்), மர, மர உற்பத்திகள் (8 சதவீதம்), அடிப்படை உலோக உற்பத்திகள் (6 சதவீதம்), தாள், தாள் உற்பத்திகள் (2 சதவீதம்) வேறு எங்கும் குறிப்பிடாத உற்பத்திகள் (11 சதவீதம்) ஆகியன முக்கியமாக விளங்கின. பெற்றோலிய இரசாயன உற்பத்திகளின் வெளியீடு 18 சதவீதத்தாலும் உலோக மல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் 3 சதவீதத்தாலும். வீழ்ச்சியடைந்தன. தனியார்துறையைப் பொறுத்தவரையில் தாள் உற்பத்திகள் தவிர்ந்த அனைத்து உற்பத்தித்தொகுதிகளினதும் வெளியீடு உயர்ந்த மட்டங்களைப் பதிவுசெய்தது.

## அட்டவணை 1.19
### கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி 1979—1983

பத்து இலட்சம் ரூபாய்களில்

| வகை | 1979 | 1980 | 1981 | 1982 | 1983(அ) |
|---|---|---|---|---|---|
| 1. உணவு, குடிபானம், புகையிலை ... | 2,856 | 3,899 | 4,496 | 5,246 | 6,998 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் .. | 1,128 | 1,923 | 3,040 | 3,863 | 5,136 |
| 3. மர, மர உற்பத்திகள் (தளபாடங்கள் உள்பட) ... | 166 | 289 | 315 | 361 | 522 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் ... | 445 | 476 | 626 | 725 | 901 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் .. | 4,508 | 9,416 | 12,015 | 13,099 | 11,888 |
| 6. உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் (பெற்றோலியமும் நிலக்கரியும் தவிர்ந்த) ... | 710 | 1,156 | 1,250 | 1,370 | 1,468 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் ... | 349 | 478 | 428 | 262 | 302 |
| 8. உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறியும், போக்குவரத்துக் கருவிகளும் ... | 569 | 620 | 782 | 904 | 1,129 |
| 9. தயாரிக்கப்பட்ட பொருட்கள் (வேறெங்கும் குறிப்பிடப்படாதவை) ... | 50 | 54 | 58 | 74 | 90 |
| மொத்தம் ... | 10,781 | 18,311 | 23,010 | 25,904 | 28,434 |

*தற்காலிகமானவை, மூலம் : இலங்கை மத்திய வங்கி.

நடைமுறைநியதிகளில், கைத்தொழில் உற்பத்திகளின் வளர்ச்சிவீதம் 1982இன் 13 சதவீதத்திலிருந்து 1983இல் 10 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பெற்றோலிய இரசாயன உற்பத்திகள் துறைநீங்கலான கைத்தொழில் உற்பத்தியின் மொத்தப் பெறுமதி 1982 இன் 16 சதவீதங்கொண்ட வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் 1983இல் 29சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளதென மதிப்பிடப்பட்டிருக்கின்றது. மர, மர உற்பத்திகள் புடவைகளும் அணியும் ஆடைகள் துறைகளினது பெறுமதி 1982 இனைவிட 1983 இல் முறையே 45 சதவீத, 44 சதவீத அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. உணவு குடிபானம், புகையிலை உற்பத்திகளின் பெறுமதி 33 சதவீதத்தாலும், உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகளின் பெறுமதி 25 சதவீதத்

தாலும், தாள், தாள் உற்பத்திகள் 24 சதவீதத்தாலும் அடிப்படைஉலோக உற்பத்திகள் 15 சதவீதத்தாலும், உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் 7 சதவீதத்தாலும் அதிகரித்தன. பெற்றோலிய இரசாயன உற்பத்திகளின் வெளியீட்டுப் பெறுமதி 9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

**வலுவும் எரிபொருளும்**

1983 இல் கைத்தொழிலில் பயன்படுத்தப்பட்ட மின்வலு 2சதவீதத்தால் அதிகரித்த வேளையில் கைத்தொழில் எரிபொருளின் உள்நாட்டு விற்பனை முன்னைய ஆண்டினைக்காட்டிலும் 37 சதவீதங்கொண்ட அதிகரிப்பினை எடுத்துக்காட்டியது. எனினும், இங்கு எடுத்துக்காட்டப்பட்டவாறு கைத்தொழிலில் மின்வலுவின் பயன்பாடு மின்வெட்டுக்காலப்பகுதியில் கைத்தொழிலாளர்களின் சொந்த மின் உருவாக்கிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட வலுவைக் கணக்கிலெடுக்கவில்லை. கைத்தொழில் எரிபொருளின் விற்பனையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு, நீர்மின்வலு உருவாக்கத்திற்கு துணையாக விளங்கும் வெப்பமின்வலுவின் உருவாக்கத்திற்காக இலங்கை மின்சபையினால் பாரடீசலின் நுகர்வின் அளவு அதிகரிக்கப்பட்டமையே முக்கிய காரணமாகும்.

மீளாய்விற்குரிய ஆண்டில் சிறு கைத்தொழில்களால் பயன்படுத்தப்பட்ட மின்வலு 12 சதவீதத்தால் அதிகரித்தவேளையில் பெரியளவு கைத்தொழில்களின் நுகர்வு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2 சதவீத அதிகரிப்பைப்பதிவுசெய்தது. எனினும், 1983ஆம், ஆண்டில் நடுத்தர அளவுக் கைத்தொழில்களின் மின்வலுப்பயன்பாட்டில் சிறிதளவான அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டது.

**அட்டவணை 1.20**

**கைத்தொழிலில் வலு எரிபொருள் என்பவற்றின் பயன்பாடு 1981 - 1983**

| விடயம் | 1981 | 1982 | 1983(அ) |
|---|---|---|---|
| 1. மின்வலு (ஆ) (கிலோவாட் மணித்தியாலங்கள்) ... | 676.7 | 739.1 | 752.0 |
| 1. 1 சிறு கைத்தொழில் ... ... | 21.3 | 26.0 | 29.0 |
| 1. 2 நடுத்தரக் கைத்தொழில் ... ... | 308.9 | 338.7 | 339.7 |
| 1. 3 பெரிய கைத்தொழில் ... ... | 346.5 | 374.3 | 383.3 |
| 2. கைத்தொழில் எரிபொருளின் உள்நாட்டு விற்பனைகள் (000 மெற்றிக் தொன்கள்) ... ... | 350.9 | 412.2 | 565.5 |
| 2. 1 பார டீசல் (இ) ... ... | 106.6 | 169.3 | 285.5 |
| 2. 2 உலை எண்ணெய் ... ... | 244.3 | 242.9 | 280.0 |

மூலங்கள்: இலங்கை மின்சபை
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

(அ) தற்காலிகமானவை.

(ஆ) தயாரிப்பு, ஏற்றுமதிச் செய்முறை கைத்தொழில்களை உள்ளடக்குகின்றது. சிறுகைத்தொழில் என குறிப்பிடப்பட்டுள்ளவை 50 கி.வா. டுக்கு குறைந்த இயலளவினைக் கொண்ட கூறுகளாகவும், நடுத்தர கைத்தொழில் 50-500 கி.வா. கொண்டவையாகவும் பெரும் கைத்தொழில் 500 கி. வா. டுக்கு மேற்பட்டவையுமாகும்.

(இ) இலங்கை மின்சபைக்கான விற்பனையும் உள்ளடங்கும்.

**அரசதுறைக் கைத்தொழில்**

உண்மை நியதிகளில் அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகளின் பொதுவான வெளியீடு முன்னைய ஆண்டின் 5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1983இல் 15 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தது. 1983 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இப் பொது வான வீழ்ச்சிக்கான முக்கிய உதவுக் காரணியாக இலங்கைப் பெற்ரேலியக் கூட் டுத்தாபனத்தின் தூய்மி பேணல் வேலைகளுக்காக 1983 ஆம் ஆண்டில் ஏறத்தாழ எட்டுக் கிழமைகளுக்கு மூடப்பட்டிருந்தமையினுல் வெளியீட்டில் (இது மொத்த அரசதுறைக் கைத்தொழில் உற்பத்தியில் ஏறத்தாழ அரைப் பங்கிற்கு வகைகூறு கின்றது) ஏற்பட்ட 21 சதவீதங்கொண்ட கணிசமான வீழ்ச்சி இருந்தது. பெற் ரோலியக் கூட்டுத்தாபனம் தவிர்ந்த அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகளின் வெளியீடு மீளாய்விற்குரிய ஆண்டில் 7 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது. அவற்றில் வளமாக்கி தயாரிப்புக் கூட்டுத்தாபனம் திருத்தத்திற்காகத் தொழிற் சாலை மூடப்பட்டமை உற்பத்திப் பிரச்சனைகள் போன்றவற்றின் முக்கிய காரணமாக 41 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இலங்கைச் சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி மட்டத்தில் ஏற்பட்ட வீழ்ச் சிக்கு (9 சதவீதம்) கிளிங்கர் வழங்கலில் ஏற்பட்ட குறைவின் காரணமாக அதன் சூளை மூடப்பட்டமையே முதன்மைக் காரணமாகும். அரச வடிசாலைக் கூட்டுத்தா பனமும் தேசிய பாற்சபையும் முறையே 32 சதவீத, 16 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தமைக்கு இவ்வாண்டில் நிலவிய முன்னெப்பொழுதுமில்லாத வரட்சி நிலைமை களின்விளைவாக உள்ளீடுகளின் பற்ருக் குறையே முக்கிய காரணமாக இருந்தது. அரச உப்புக் கூட்டுத்தாபனத்தினதும் அரச சுரங்க கனிப் பொருள் அபிவிருத் திக் கூட்டுத்தாபனத்தினதும் உற்பத்தி 1983இல் 30 சதவீதத்தால் வீழ்ச்சி யடைந்தது. அதிகரித்த வெளியீட்டு மட்டங்களைப் பதிவு செய்த கூட்டுத்தாப னங்களாக அரச மரம் (21 சதவீதம்) இலங்கை எண்ணெய் கொழுப்பு (16 சத வீதம்) இலங்கைக் கனிப் பொருள் மணல் (10 சதவீதம்) ஆகியன விளங்கின.

அட்டவணை 1.21

**அரசதுறை முதன்மைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்**


(1977 = 100)

| வகை | 1981 | 1982 | 1983(அ) |
|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை ... | 80.6 | 83.6 | 73.6 |
| 2. புடவை, அணியும் ஆடை, தோல் உற்பத்திகள் ... | 118.3 | 135.7 | 127.0 |
| 3. மர, மர உற்பத்திகள் ... | 136.4 | 151.0 | 163.1 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் ... | 141.1 | 133.3 | 135.7 |
| 5. இரசாயனம், பெற்ரோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் ... | 118.9 | 133.1 | 105.2 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள உற்பத்திகள் ... | 161.8 | 131.5 | 125.1 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் ... | 169.0 | 106.3 | 109.7 |
| 8. உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள் ... | 82.2 | 96.3 | 76.8 |
| எல்லா வகைகளும் ... | 118.4 | 124.6 | 106.7 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## அரசதுறையின்* கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்




இலங்கை மத்திய வங்கி

* 26 பெரும் கைத்தொழில் முயற்சிகளின் வெளியீட்டைப் பிரதிபலிக்கிறது.

UNIVERSITY OF MORATUWA LIBRARY SRI LANKA

விற்பனைகளைப் பொறுத்தவரை இலங்கை தோல் உற்பத்திகள், அரச சுரங்க கனிப் பொருள் அபிவிருத்தி, இலங்கை மட்பாண்டம், எண்ணெய்க் கொழுப்புக் கூட்டுத்தாபனம் ஆகியன 1983இல் சிறந்து விளங்கின. மறுபுறத்தில் அரசவன் கலம், இலங்கை உருக்கு கூட்டுத்தாபனங்களின் விற்பனை தொடர்ந்தும் மீளாய் விற்குரிய ஆண்டிலும் வீழ்ச்சியடைந்தன. உயர்ந்த மட்டப் பாதுகாப்புக்கள் வழங்கப்பட்ட போதும் சில அரசதுறைக் கைத்தொழில்கள் அதாவது டயர், எரி சோடா, சீனி போன்ற உற்பத்தித் தயாரிப்புக்களில் ஒப்பீட்டு ரீதியில் அவை நன்மைகளை அனுபவித்த போதும் உள்நாட்டுத் தேவையை ஈடு செய்யத்தம்மால் இயலாது என்பதனைத் தெளிவாகக் காட்டியிருக்கின்றன.

1977 இன் பொருளாதார சீர்திருத்தங்கங்களுடனும், முன்னர் நிலவிய ஒழுங் கமைப்பின் பாதுகாப்பு நீக்கப்பட்டமையும் இதுவரை அரசதுறை முயற்சிகளினால் அனுபவிக்கப்பட்டுவந்த சாதகமான நிலைமைகள் நிறுத்தப்பட்டதுடன் தனியார் துறைத் தொழில் முயற்சிகள் சென்றுகொண்டிருந்த அதே போட்டித்தன்மையில் இவையும் விடப்பட்டன. வர்த்தகரீதியில் இயலத்தக்க அடிப்படையில் தொழிற் படும்படியும், அபிவிருத்தி நோக்கங்களுக்காகத் தமது சொந்த நிதிகளை உருவாக் கும்படி அல்லது போட்டித்தன்மை மிக்க வர்த்தகக் கடன்பாடுகளை நாடும்படியும் அவை கேட்டுக்கொள்ளப்பட்டன. எனினும், அரசதுறைத் தயாரிப்பு முயற்சிகளி னது இலாபத் தன்மையின் பொதுவான மட்டம் அண்மைய ஆண்டுகளில் வீழ்ச் சியடைந்துள்ளமையை அவதானிக்கத்தக்கதாகவுள்ளது. அவற்றின் ஒன்றுசேர்ந்த நிதிகள் ரூ. 6,790 இலட்சங்கொண்ட இலாபத்தினை 1980இல் ஏற்படுத்தின. எனினும், அதே நேரத்தில் தொடர்ச்சியான இரண்டாண்டுகளின் பொதுவான இழப்புக்கள் முறையே ரூ. 2,410 இலட்சமாகவும் ரூ. 5,550 இலட்சமாகவும் விளங்கின. இந்நிலைமைகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளாக நிதிமாற்றல், வீண் விரயங்களைப் பரிசோதித்தல், செலவினைக் குறைக்கும் வழிமுறைகளை கடைப் பிடித்தல் என்பன அண்மைய காலங்களில் வலியுறுத்தப்பட்டுள்ளன.

கிடைக்கத்தக்க தரவுகளின்படி 1983ஆம் ஆண்டில் இலாபத்தினைப் பதிவு செய்த கூட்டுத்தாபனங்களாக இலங்கை தோல் உற்பத்திகள், அரச மரம், அரச அகழ்தல், கனிப் பொருள் அபிவிருத்தி, அரச வடிசாலை, இலங்கை மட்பாண்டம், இலங்கை சீமெந்து, தேசிய உப்புக் கூட்டுத்தாபனம் ஆகியன விளங்கின. 1983 ஆம் ஆண்டில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இலாபமென மதிப்பிடப்பட்டிருக் கும் ரூ. 9.070 இலட்சமும் முன்னைய ஆண்டில் ஏற்பட்ட ரூ. 6,150 இலட்ச இழப் பினை ஓரளவிற்கு எதிரீடு செய்திருக்கின்றது. அரச வன்கலம், இலங்கை உருக்கு கூட்டுத்தாபனங்கள் தொடர்ந்தும் இரண்டாவது ஆண்டாக இழப்புக்களை அடைந்தன.

1983ஆம் ஆண்டில் அரசதுறைத் தொழில் முயற்சிகளுக்கான அரச மாற்றல் கொடுப்பனவுகள் ரூ. 7,930 இலட்சங்களாக விளங்கி ரூ. 2,270 இலட்சங்கொண்ட மூலதன மாற்றல்களையும் நடைமுறை மாற்றல் கொடுப்பனவுகள் வடிவிலான ரூ. 5,650 இலட்சங்களையும் உள்ளடக்கியிருந்தன. இலங்கைச் சீனி, தேசிய புடவை, அரச வளமாக்கித்தயாரிப்பு, இலங்கை எண்ணெயும் கொழுப்பும், இலங்கை உருக்கு ஆகிய கூட்டுத்தாபனங்களும், தேசிய பாற்சபையும் இம்மாற்றங்களில் பெருமள வைப் பெற்றன.

அட்டவணை 1.22

**கைத்தொழில் முயற்சிகளுக்கு அரசின் நிதி மாற்றல்கள் 1981—1983**

(ரூபா பத்து இலட்சம்)

| கூட்டுத்தாபனங்கள்/முயற்சிகள் | மூலதனம் | | | நடைமுறை | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1981 | 1982 | 1983* | 1981 | 1982 | 1983* | 1981 | 1982 | 1983* |
| தேசிய பாற்சபை ... | 50.5 | 10.7 | 9.0 | 44.3 | 45.9 | 21.3 | 94.8 | 56.6 | 30.3 |
| இலங்கை எண்ணெய், கொழுப்பு ... | 34.7 | 10.9 | 25.3 | — | — | — | 34.7 | 10.9 | 25.3 |
| இலங்கைச் சீனி ... | 46.8 | 75.4 | 122.5 | — | — | — | 46.8 | 75.4 | 122.5 |
| தேசிய புடவை ... | — | — | 31.5 | — | — | 32.7 | — | — | 64.2 |
| தேசிய தாள் ... | 4.8 | — | — | 21.2 | 10.0 | — | 26.0 | 10.0 | — |
| அரச இறப்பர் தயாரிப்பு ... | — | — | — | — | 0.7 | — | — | 0.7 | — |
| இலங்கை ஆயுள்வேத மருந்துகள் ... | 7.5 | — | — | — | — | — | 7.5 | — | — |
| அரச வளமாக்கி தயாரிப்பு ... | 88.5 | 300.0 | — | 269.0 | — | 494.7 | 357.5 | 843.0 | 494.7 |
| இலங்கை உருக்கு ... | 7.9 | — | 39.1 | — | 543.0 | — | 7.9 | — | 39.1 |
| அரச வன்கலம் ... | — | — | — | — | — | 0·4 | — | — | 0.4 |
| தேசிய பொதியிடல் பொருட்கள் ... | — | — | — | 6.0 | 2.5 | 7.7 | 6.0 | 2.5 | 7.7 |
| வரையறுக்கப்பட்ட இலங்கை ஓட்சிசன் ... | 10.0 | — | — | — | 2.6 | 8.6 | 10.0 | 2.6 | 8.6 |
| மொத்தம் ... | 250.7 | 397.0 | 227.4 | 340.5 | 604.7 | 565.4 | 591.2 | 1001.7 | 792.8 |

* தற்காலிகமானவை

மூலம்: பொதுத் திறைசேரி

**முதலீட்டு ஊக்குவிப்பு வலயம்**

கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழு 1983 இல் ஒப்புதலளிக்கப்பட்ட 13 செயற்றிட்டங்களுடன் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த எண்ணிக்கை 1983 இறுதியில் 185 இனை அடைந்தது. இவற்றில் 99 முயற்சிகள் கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவில் பல்வேறு கைத் தொழில்களை அமைப்பதற்கான உடன்படிக்கைகளில் ஏற்கனவே கைச்சாத்திட்டிருக்கின்றன. 56 தொழில் முயற்சிகள் கட்டுநாயக்கா முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்குள்ளே வர்த்தக உற்பத்தியில் ஈடுபட்டிருக்கையில் 10 முயற்சிகள் கட்டுநாயக்கா முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்கு வெளியே உற்பத்தியிலீடுபட்டிருந்தன. வர்த்தக உற்பத்தியிலுள்ள செயற்றிட்டங்களில் 33 செயற்றிட்டங்கள் தைக்கப்பட்ட ஆடை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவில் தொழிலில் உள்ளோரின் மொத்த எண்ணிக்கை 1982 திசெம்பரின் 22,606 உடன் ஒப்பிடுகையில் 1983 திசெம்பரில் 26,053 ஆக விளங்கியது.

தொடர்ந்தும் பெருமளவு எண்ணிக்கை கொண்ட செயற்றிட்டங்கள் ஆடைத் தயாரிப்புத் துறையிலிருந்த போதும் இறப்பர் உற்பத்திகள், தேயிலை உறைகளிலடைத்தல், மின்துணைக் கருவிகள் இரத்தினக்கல் பட்டை தீட்டலும் ஆபரணமும் போன்ற பல்வேறு துறைகளுக்கும் பன்முகப்படுத்தப்பட்டிருப்பதையும் காண முடிகிறது. 1983 ஆம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட பதின்மூன்று செயற்றிட்டங்களில் இரண்டு இரசாயனத்திலும் ஒன்று புடவையிலும் எட்டு உலோகக் கருவிகள் தொகுதியிலும் உலோமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள், உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள் தொகுதிகளில் ஒவ்வொன்றும் ஈடுபட்டிருந்தன. எனினும், கடந்த சில ஆண்டுகளில் ஒப்புதலளிக்கப்பட்ட எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் மொத்த ஒப்புதல்களின் அதிகரிப்பு வீதத்தில் ஓரளவு வீழ்ச்சி காணப்பட்டது.

முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தின் இன்னொரு முக்கிய பண்பு யாதெனில் இலங்கையின் இரண்டாவது சுதந்திர வர்த்தக வலயமான பியகமவின் கட்டுமான நடவடிக்கைகள் தொடங்கிவிட்டமையாகும். இது 450 ஏக்கர்களை உள்ளடக்கியிருப்பதுடன் 20 கைத்தொழில் கூறுகளுக்கான தொடக்கக் கட்டுமான நடவடிக்கைகள் 1983 நவெம்பரில் தொடங்கப்பட்டுள்ளன.

முதலீட்டு ஊக்குவிப்பு வலயத் தொழில் முயற்சிகளின் ஏற்றுமதி வருவாய்கள் 1983 இல் ரூ. 24,190 இலட்சங்களாக (சிஎஉ 960 இலட்சம்) அமைந்து முன்னைய ஆண்டினைவிட 46 சதவீதங்கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. முன்னைய ஆண்டுகளைப் போன்றே 1983 இலும் ஆடைகள் காலணித்துறை ஏற்றுமதி வருவாய்களின் உயர்ந்த தொகைக்கு (79 சதவீதம்) வகைகூறி முன்னைய ஆண்டினைக் காட்டிலும் 47 சதவீதங்கொண்ட அதிகரிப்பைப் பிரதிபலித்தது. இத்துறையில் தொழிலாளி ஒருவருக்கான ஏற்றுமதி வருவாய் முன்னைய ஆண்டின் ரூ 69,315 உடன் ஒப்பிடுகையில் ரூ. 85,707 ஆக விளங்கியது. இரண்டாவது பெரும் தொகுதியாக விளங்கிய இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் வகை ஏற்றுமதி வருவாய்

அட்டவணை 1.23

முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் — தொழில்நிலையும் ஏற்றுமதி வருவாய்களும்

| கைத்தொழில் | 1982 (அ) | | 1983 (ஆ) | |
|---|---|---|---|---|
| | தொழில்நிலை எண்ணிக்கை (திசெம்பர் இறுதி) | மொத்த ஏற்றுமதி வருவாய்கள் (கஏபெ) ரூ. ப. இ. | தொழில்நிலை எண்ணிக்கை (திசெம்பர் இறுதி) | மொத்த ஏற்றுமதி வருவாய்கள் (கஏபெ) ரூ. ப. இ. |
| 1. ஆடைகளும் காலணிகளும் ... | 18,853 | 1,306.8 | 22,389 | 1,918.9 |
| 2. இறப்பரும் பிளாத்திக்கு உற்பத்திகளும்.. | 1,094 | 89.9 | 760 | 107.6 |
| 3. மின்னியலும் மின் உற்பத்திகளும் ... | 304 | 25.2 | 431 | 54.9 |
| 4. உருக்கும் உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகளும், பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 129 | 8.5 | 175 | 37.7 |
| 5. இரத்தினக்கல் வெட்டலும் ஆபரணங்களும் | 587 | 15.0 | 684 | 18.0 |
| 6. குடிபானங்களும் புகையிலையும் ... | 13 | 10.4 | 30 | 41.7 |
| 7. மர உற்பத்திகள் .. | 113 | 2.7 | 64 | 1.6 |
| 8. உலோகமல்லா உற்பத்திகள் ... | 72 | 4.7 | 85 | 5.6 |
| 9. கயிறு உற்பததிகள் ... | 113 | 4.2 | 29 | 9.4 |
| 10. ஏனையவை ... | 1,328 | 185.7 | 1,406 | 224.1 |
| மொத்தம் ... | 22,606 | 1,653.1 | 26,053 | 2,419.5 |

அ. திருத்தியமைக்கப்பட்டவை. மூலம்: கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு
ஆ. தற்காலிகமானவை.

களில் ரூ. 1,070 இலட்சங்களுக்கு அல்லது 4 சதவீதத்திற்கு வகைகூறியது. குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்த இன்னொரு உற்பத்தி வகையான குடிபானம் புகையிலையின் வருவாய் ரூ.100 இலட்சங்களிலிருந்து ரூ.410 இலட்சங்களுக்கு அதிகரித்தது. ஏற்றுமதி செய்யப்பட்ட ஏனைய விடயங்களாக ஆபரணங்கள், மின், மின்னியல் உற்பத்திகள், காலணிகள் உருக்கு உற்பத்திகள் ஆகியன விளங்கின.

## பொருளாதார நலன்புரிச் செலவுகள்

### வலு

பொருளாதார நடவடிக்கைகள் துரிதமடைந்தமையும் அதனோடிணைந்த விரிவான பொருளாதார உள்ளமைப்பு வசதிகளுக்கான கேள்வியும் அண்மை ஆண்டுகளில் வலுவின் நுகர்வில் என்றுமில்லாத ஒரு அதிகரிப்பினை ஏற்படுத்தின. கேள்விக்கும் நிரம்பலுக்கும் இடையிலான சமமின்மையும் இதன் விளைவாக நிரம்பலில் ஏற்பட்ட தாக்கங்களும் 1983 இலும் தொடர்ந்து நிலவின. பன்னாட்டு ரீதியில் நோக்குகையில் 1973 தொடக்கம் கடந்த பத்து ஆண்டுகளிலும் சென்மதி நிலுவைமீது பாரதூரமான தாக்கத்தினை ஏற்படுத்தியது. உலக எண்ணெய் விலைகள் முதற்தடவையாக 1983 இல் வீழ்ச்சியடைந்தன. எனினும் 1983 இல் எண்ணெய் விலைகள் உண்மை நியதிகளில் மட்டுமன்றி உண்மையில் பெயரளவிலும் வீழ்ச்சியடைந்தன. எவ்வாறுயினும் எதிர்பாராத வரட்சி நிலைமைகளினால் நீர்மின் உருவாக்கம் மிகப் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டமையினால் சாதகமான பன்னாட்டுச் சூழ்நிலையின் முழுமையான பயனையும் இலங்கை அனுபவிக்க முடியவில்லை. இது வெப்பமின் பொறிகளைத் தொழிற்படுத்துவதற்கு இறக்குமதி செய்யப்பட்ட எண்